[8th September 1960

Sri N. R. THIAGARAJAN : இந்தப் பாண்டிய நாடு கூட்டுறவு பயிற்சி ஸ்தாபனத்திற்கு மொத்த எஸ்டிமேட் தொகை எவ்வளவு? அதில் யார் யார் டெண்டர் கொடுத்திருக்கிறார்கள்? மிக அதிகமாக டெண்டர் கொடுத்தவர்களுக்கு அவ்வேலை கொடுக்கப்பட்டிருப்பதின் காரணம் என்ன? இப்படிச் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : ஐந்து பேர்கள் டெண்டர் கொடுத்தார்கள். அந்த விவரம் வருமாறு :—

(1) ஸ்ரீ எம். அழகு பிள்ளை—ரூ. 1,47,049·50.

(2) ஸ்ரீ எஸ். மொகமட் பாச்சா சாகிப்—ரூ. 1,52,986·50.

(3) மெஸ்ஸர்ஸ் சக்தி என்ஜினியரிங் கம்பெனி—ரூ. 1,53,420·50.

(4) ஸ்ரீ எம். ராமச்சந்திரன்—ரூ. 1,57,027·50.

இதிலே முதலாவதாக ஸ்ரீ எம். அழகு பிள்ளை அவர்களுக்கு இதற்கு முன்னால் இது மாதிரியாக டெண்டர் எடுத்து வேலை செய்திருக்கக்கூடிய அனுபவம் கிடையாது. இரண்டாவதாக மொகமட் பாச்சா சாகிப் அவர்களுக்கு இம்மாதிரியாக பெரிய வேலை எடுத்துப் பழக்கம் இல்லை, இரண்டாவது அவர் டி. பி. சானடோரியம் கட்ட எடுத்த டெண்டர் வேலையையே இன்னும் பூர்த்தி செய்யாமல் இருக்கிறார். மூன்றாவதாக சக்தி என்ஜினியரிங் கம்பெனியாருக்கு சிறிய சிறிய சர்க்கார் டெண்டர் வேலைகளை எடுத்துச் செய்திருக்கக்கூடிய பழக்கம் இருந்தாலும்கூட இம்மாதிரியான கட்டிடம் கட்டுவதற்கு அவர்களிடம் போதுமான வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. நான்காவதாக ஸ்ரீ எம். ராமச்சந்திரன் அவர்கள் ரூ. 1,57,027·50 க்கு டெண்டர் கொடுத்தாலும் அதை ரூ. 1,53,507-க்குள் செய்வதற்கு ஒத்துக்கொண்டார். கடந்த பத்து வருஷமாக மதுரை மில்லில் இது போன்ற கட்டிடங்கள் கட்டி நல்ல பழக்கம். மேலும் பாண்டியன் பாங்குக்கு 7 லட்சம் ரூபாயில் கட்டிடம் கட்டியும் வருகிறார். ஆகவே அவர் தகுதி பற்றித்தான் அவருக்கு இவ்வேலை கொடுக்கப்பட்டது. பொதுவாக டெண்டர்கள் வரவழைத்தால் குறைவான டெண்டர் கொடுத்தவருக்குத்தான் இவ்வேலையை போர்ட் ஆப் டைரெக்டர்கள் கொடுக்க முடியும். அதிகமான டெண்டர் கொடுத்தவரிடத்தில் அவ்வேலை கொடுக்கப்படவேண்டுமென்றால் ரிஜிஸ்ட்டிரார் ஆப் கோவாப்பரேடிவ் சொஸைடியின் அனுமதி பெற்றுத்தான் தரமுடியும். அனுமதி கோரி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். சர்க்காரும் அதைப் பரிசீலனை செய்து வருகிறது.

Sri N. R. THIAGARAJAN : மற்ற இலாகாக்களிலும் இவ்வாறு டெண்டர் வரவழைக்கப்படும்போது இந்த மாதிரியாக அனுமதிக்கப்படுகிறதா? டெண்டர் கொடுக்கும்போதே அவர்களுடைய தகுதி பார்க்காமலா கொடுக்கப்படுகிறது?

The Hon. Sri R. VENKATARAMAN : டெண்டர்யார் வேண்டுமானாலும் போடலாம். டெண்டர் பீஸ் கட்டிவிட்டால் போதுமானது. யோக்கியதாம்சங்கள் இருக்கக்கூடியவர்கள்தான் டெண்டர் போட முடியும் என்று சொல்ல முடியாது.

College of Indigeneous Medicine

*539 *Q.*—**Sri A. VEDARATNAM:** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாட்டு வைத்தியக் கல்லூரி அமைக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

(ஆ) எந்தெந்த வைத்திய முறைகள் அங்கு போதிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது?

(இ) சமீபத்தில் மூடப்பட்ட இந்திய வைத்தியக் கல்லூரியிலிருந்து இப்புதிய கல்லூரி எந்தெந்த முறையில் வித்தியாசப்படும்?

(ஈ) இக் கல்லூரி எப்போது துவங்கும்?

[8th September 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) An expert Committee has been constituted to advise the Government in the matter of setting up of a College and imparting instructions at degree level in Ayurveda, Siddha and Unani in the said college.

(*b*) to (*d*) All these questions will be considered after the report of the Committee is received by Government.

SRI A. VEDARATHNAM : இந்தக் கல்லூரிகளில் பயிற்சி பெறுவதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும்? அப்படி தகுதி பெற்றவர்கள் பயிற்சி பெற்ற பின் அவர்கள் எம்மாதிரியான வேலைகளில் எங்கே அமர்த்தப்படுவார்கள் என்பதை தயவுசெய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதெல்லாம் இந்தக் கமிட்டி ரிப்போர்ட்டு வந்த பிற்பாடுதான் எதெது எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி யோசனை செய்ய முடியும்.

Co-operative farms

*540 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் வாரம் பயிரிடும் விவசாயிகளின் கூட்டுறவு பண்ணைகள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன ?

(ஆ) இதில் (1) கோவில்கள், (2) மடங்கள், (3) தரிசு நிலங்கள், (4) தனிப்பட்டவர்கள் முதலிய நிலங்களில் ஆரம்பிக்கப்பட்டவை எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (ஆ) A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்த வாரம் பயிரிடுபவர் கூட்டுறவு சங்கமானது நல்ல முறையில் வேலை செய்கிறதா ? மற்ற நிலங்களில் விளைகிறதைவிட இங்கே அதிகமாக விளைகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நல்ல முறையில் வேலை செய்கிறது என்பதுதான் சர்க்காருடைய அபிப்பிராயம். இதில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய அபிப்பிராயமும்கூட. முப்பத்தேழு சொசைடிகள் இப்போது ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. நடைமுறையில் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வந்துவிடும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: சாகுபடியாளர் கூட்டுறவு சொஸைடிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற இடங்களில் உணவு உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறதா? அதே நேரத்தில் அங்கே சாகுபடி செய்யக் கூடியவர்களுடைய பொருளாதாரம் உயர்ந்திருக்கிறதா ? அப்படி முன்னேற்றம் காணப்பட்டால் மேலும் அதை விஸ்தரிக்க வழி உள்ள இடங்களில் சாகுபடியாளர் சொஸைடியை அமைக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருடைய கேள்விதான் அவருடைய அபிப்பிராயம். அதைப் பல முறை சர்க்காரிடத்தில் அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். பொதுவாக இந்தக் கூட்டுறவு சொஸைடிகள் நன்றாக நடக்கிறது என்பதுதான் சர்க்காரின் அபிப்பிராயமும்கூட. அதை விஸ்தரிக்க சர்க்கார் போதிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளும்.

---

[a] Printed as Appendix II on pages 493—495 infra.